# குறள்நெறி


குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

மின்னிதழ் 14 | ஆடி 12, தி.பி 2052 | சூலை 28, பொ.ஆ 2021






## தமிழ்க்கடல் புலவர்

# இரா.இளங்குமரனார்

## நினைவுமலர்

*இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு* *விற்பனைக்கு அல்ல.*

# தமிழ்நாட்டு முதல்வர் புகழ்வணக்கம்

*வாழுங் காலத்தின் மாபெரும் தமிழ் மூதறிஞர், நூலாசிரியர், முது முனைவர் இளங்குமரனார் ஆடி 9 (சூலை 25) மதுரையில் உயிரிழந்தார். அவருக்கு வயது 94.*

*இளங்குமரனார் மறைவுக்கு தமிழ்நாட்டு முதல்வர் அவரகள் இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில்,*

"தமிழையே உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த முதுபெரும் அறிஞரான அய்யா இளங்குமரனார் மறைவு தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இலக்கணச் செழுமையும் இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழியை - அதன் பண்பாட்டைத் தமிழர்களின் இல்லந்தோறும் நிலைநிறுத்திடுவதற்காக தனது 94-ஆவது அகவையிலும் தொடர்ந்து பணியாற்றியவர்.



இளங்குமரனார் தமிழ்மறையாம் குறள்நெறி வழியில் தமிழர்களின் திருமணங்களை முன்னின்று நடத்தியதுடன், வள்ளுவர் தவச்சாலை என்பதை நிறுவி, வெள்ளுடை ஞானியாக வாழ்ந்தவர். புத்தாயிரம் (2000) ஆண்டு தொடக்கத்தில் கலைஞர் அவர்கள் குமரி முனையில் 133 அடி உயரத்தில் அய்யன் திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்த மகத்தான நிகழ்வில், அய்யா இளங்குமரனார் அவர்கள் பங்கேற்று உரையாற்றியது தனிச்சிறப்பாகும்.

வடமொழி பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழைப் பாதுகாக்கும் முனைப்புடன், சமக்கிருத மந்திரங்களை முற்றிலும் தவிர்த்து, 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருமணங்களை திருக்குறள் ஓதியும் - தமிழில் வாழ்த்தியும் நடத்தி வைத்தவர் அய்யா இளங்குமரனார்.

அடுத்தடுத்த தலைமுறைகளிலும் தமிழ் தழைத்திருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் 500-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். பழந்தமிழர் வாழ்வியல் அடிப்படையில் உடல்நலன் காக்கும் முறைகளையும் அவர் தொடர்ந்து கடைப்பிடித்து நலவாழ்வு வாழ்ந்து, அவற்றை இன்றைய இளைஞர்களும் பின்பற்றும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தவர். இளங்குமரனாரின் உடை போலவே அவரது உள்ளமும் தூய்மையானது. அயராது அவர் மேற்கொண்ட தமிழ்ப்பணி போற்றுதலுக்குரியது. அய்யா இளங்குமரனாரினன் மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், தமிழ்ச்சான்றோர்கள் அனைவருக்கும் முதலமைச்சர் என்ற முறையிலும், தனிப்பட்ட முறையிலும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் போல் என்றென்றும் நிலைத்திருக்கும் அய்யா இளங்குமரனாரினன் இறவாப் புகழ் " என்று தெரிவித்தார்.

# செந்தமிழந்தணர், என் ஆசான் திருமிகு இரா.இளங்குமரனார் முதுமையால் மதுரையில் மறைந்தார்

என **மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்** தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில்,

"இளம்வயதிலேயே தொடக்கப்பள்ளி ஆசிரியராக வாழ்க்கை தொடங்கி, தானே பயின்று புலவர் பட்டம் பெற்று, உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராக, மேல்நிலைப்பள்ளி பொறுப்புத் தலைமையாசிரியராக, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வறிஞராக, தமிழ்ச் சொற்பிறப்பு அகரமுதலித் திட்டத்தில் மொழியறிஞராகச் சிறக்கப்பணியாற்றிய செம்மல் அவர். பாவலர், சொற்பொழிவாளர், சொல்லாய்வறிஞர், எழுத்தாளர், தமிழாய்வாளர், தமிழிய வரலாற்று வரைவாளர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தமிழியக்கச் செயற்பாட்டாளர், தமிழ்நெறி பரப்புநர் எனப் பன்முகங்கொண்டவர் இளங்குமரனார்.



திருநகரில் பாவாணர் நூலகத்தையும் திருச்சிக்கு அருகில் திருவள்ளுவர் தவச்சாலையையும் அமைத்தவர். அதிர்ந்து பேசா பண்பாளர், ஆய்ந்துபேசும் அறிஞர், எழுத்தாளராக வாழ்வதற்காக அரசுப்பணியைத் துறந்தவர், கண்பார்வை இழந்தாலும் தனது எழுத்துப்பணி தடைபடக்கூடாது என்பதற்காக கண்களை மூடியெழுதிப் பழகியவர். திருக்குறளுக்கு உரையை திருக்குறளிலேயே தேடவேண்டுமென வலியுறுத்திய குறளாசன். குறள்வழித் திருமணம், புதுமனை புகுவிழா என குறளியத்தை வாழ்வியல் நெறியாக வகுத்து வாழ்ந்து காட்டியவர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, உலகில் முதன்முதலாகப் பெண்ணொருத்தியால் எழுதப்பட்ட இலக்கண நூலான காக்கைப்பாடினியத்தை - அது மறைந்துவிட்டது என்று தமிழறிவுலகம் கருதியவேளையில் - கண்டெடுத்து தமிழ்கூறு நல்லுலகிற்கு வழங்கிய தமிழ்ப்பாட்டனார் எங்கள் இளங்குமரனார். என அவரைப்பற்றிய எண்ணங்கள் ஒவ்வொன்றும் விண்மீன்களாய் மனவானில் ஒளிவிடுகின்றன. அவரது இழப்பை மனம் ஏற்கமறுக்கிறது. ஆனால், இயற்கையின் கட்டளையை ஏற்று அவருக்கு வீரவணக்கம் செலுத்துகிறேன்" என்று தெரிவித்தார்.

# செந்தமிழ் அந்தணர் பெரும்புலவர் தமிழ்ப்பெருங்கடல் தமிழறிஞர் இரா.இளங்குமரனார் ஐயா அவர்கள் இயற்கை எய்திவிட்டார்! - செ. இரா. செல்வக்குமார்

ஆற்றொணாத் துயரமான செய்தி! ஈடு செய்யவே இயலாத பேரிழப்பு. தமிழுக்கு ஈடரிய செம்மைமிகு வளங்கள் சேர்த்த பெருமான். அவருடைய அருமைகளையும் பெருமைகளையும் மாண்புகளையும், அவர் பதிந்து வைத்த அறிவுச்செல்வங்களையும் அறிந்தறிந்து போற்றவேண்டும் வழிவழியாய் வரும் தமிழ்மக்கள்! என்றென்றும் வாழ்க ஐயாவின் செம்புகழ்!.

பிறப்பு 30.1.1930 - மறைவு 25.7.2021

"மதுரையில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற இளங்குமரனாரின் இயற்பெயர் கிருட்டிணன். எட்டாவது குழந்தையென்பதால் வைக்கப்பட்ட பெயர். தனித்தமிழ்இயக்க ஈடுபாடு ஏற்பட்டபின் பெயரை மாற்றிக்கொண்டார். மனைவி செல்வம் மறைந்துவிட்டார். கலைமணி, இளங்கோ, பாரதி, திலகவதி என இவருக்கு நான்கு மக்கள். 500க்கு மேற்பட்ட நூல்களை எழுதிய சாதனையாளர். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் முதுமுனைவர் பட்டம் வழங்கப்பட்டவர். செந்தமிழ்ச்சொற்பொருட்களஞ்சியம் (14தொகுதிகள்) தேவநேயப்பாவாணரின் ஆய்வுப்பிழிவான 'தேவநேயம்' (10தொகுதிகள்) முதலான அரிய நூல்கள் இவர்பெயரை என்றும் பேசுவன. நெல்லை மாவட்டம் வாழவந்தாள்புரத்தில் பிறந்தவர். மதுரை திருநகர் இராமன்தெரு இல்லத்தில் இன்று (சூலை 25) இரவு 7.30க்கு இயற்கை எய்தினார். நாளை (திங்கள் சூலை 26) மாலை 4.00 மணிக்கு இறுதி வணக்கம் நிகழ உள்ளது.

## தமிழ்க்காப்புப் போராளி இளங்குமரனார்

செந்தமிழ்அரிமா இலக்குவனார் 1960-ஆம் ஆண்டு தோற்றுவித்த தமிழ்க்காப்புக்கழகத்தின் செயலராக எழுச்சியுடன் பணியாற்றியவர் எங்கள் ஆசான் இளங்குமரனார். 1973-இல் இலக்குவனார் புகழுடல் எய்தும்வரை தொய்வின்றிச் செயலராகக் களம் கண்டவர் இளங்குமரனார்.

கெடல் எங்கே தமிழின் நலம், அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க- என்பதே இதன் கொள்கை, நோகம், செயல்திட்டம்.

1963-ஆம் ஆண்டு மதுரை வந்தபோது பாரதிதாசன் தமிழ்க்காப்புக்கழகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்.

அப்போது "இலக்குவன் ஒருவனால் மட்டுமே இப்படி ஒரு கழகத்தை நிறுவமுடியும். போராடமுடியும்" என்று பாரதிதாசன் பேசியது குறிப்பிடத்தக்கது.

மதுரைமாநகரின் மாடவீதிகளில் உலாவந்து கடைகளின் பெயர்களைத் தமிழில் எழுதுமாறு இலக்குவனாரின் தமிழ்க்காப்புகழகம் அணிதிரண்டு வந்து வலியுறுத்திய தமிழ்க்காப்புப் பெருநடையின் படம் இங்கே வெளியிடப்பட்டுள்ளது.

இலக்குவனாரின் இடதுபுறம் முன்றாவதாக வருபவர் அப்போது அமெரிகன் கல்லூரிப் பேராசிரியராக விளங்கிய வீ.ப.கா.சுந்தரம் அவர்கள்.





இலக்குவனாருக்குப் பக்கத்தில் அவரது வலது தோளையொட்டி நடை வருபவர் நம் ஐயா இளங்குமரனார். அதனை மட்டும் பெரிதாக்கி தனியே வழங்கியுள்ளேன்.

இளங்குமரனார். மட்டுமல்ல பேராசிரியர் வீ.ப.கா.சுந்தரம் அவர்களும் தம் வாழ்நாளெலாம் தமிழ் உரிமைப் போராளியாக வாழ்ந்ததை மறந்துவிடக்கூடாது.

# கொல்லிமலை உலா

*ஆசான் இளங்குமரனார், சிலம்பொலியார், கவிஞர் ஞானச்செல்வன், புலவர் பதுமனார், பெங்களூர் முத்துசெல்வன், இளவரசஅமிழ்தன், செ.இராமானுசன், பால.சீனிவாசன், சுந்தர், மணிமேகலை புட்பராசு ஆகியோர் 11/4,12/4,13/4 என மூன்று நாள்கள் கொல்லிமலை சென்றுவந்தனர்.*

இளவரச அமிழ்தன் அனைவரையும் ஒருங்கிணைத்து அழைத்துச் சென்றார்.

சிலம்பொலியார் அங்கங்கே விழாக்களுக்கும் வரவேற்புகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

புலவர் பெருமக்களோடும் சிலம்பொலியாருடனும் ஆசான் இளங்குமரன் ஆகியோருடன் சென்று வந்த பயணம் நினைக்குந்தொறும் இனிப்பது.தமிழ்த்தேன் பொழியும் இலக்கிய அருவிகளில் திளைக்கச் செய்தனர் இளங்குமரனாரும் சிலம்பொலி செல்லப்பனாரும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழர்கள் எங்கெல்லாம் சென்று தங்கள் உழைப்பால் தொழில்வளம் சிறக்கச் செய்து பின்னர் விரட்டப்பட்டார்கள் என்பதனை விவரமாக எடுத்துரைத்தார் முத்துசெல்வன்.










# இளங்குமரன் ஐயாவிற்குக் கனடா இலக்கியத்தோட்டம் வழங்கிய விருது

*புலவர்மணி.முதுமுனைவர் இரா.இளங்குமரன் அவர்களுக்குக் கனடா இலக்கியத்தோட்டம் விருது வழங்கியது. மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விழா.கனடாப் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார் 20/5/17 முற்பகல் வழங்கினார்.*

அத்தருணத்தில் மறைமலை இலக்குவனார் படித்தளித்த வாழ்த்துப்பா!




வாழிய பெரும! வண்டமிழ் போன்றே!
புலவர்மணி, முதுமுனைவர் இளங்குமரனார்க்கு வாழ்த்து
பளிங்கெனத் துளங்கிடும் பண்புசால் உள்ளம்;
உளங்கவர் முறுவல் விளங்கிடும் திருமுகம்;
தமிழ்நலன் காத்தல் தம்கடன் என்றே
தளரா துழைத்திடும் தறுகண் உறைவிடம்;
மறைமலையார் போல் நிறைவுறு புலமை;
பாவாணர் நெறியில் ஓய்விலா ஆய்வு;
இலக்குவர் வழியில் இயங்கிடும் தமிழ்மறம்;
இனம்,மொழி பேணிட இன்றமிழ் மக்களை
எழுச்சி கொளச்செய உலகெலாம் பயணம்;
ஆய்வுச் செல்வத்தை அனைவரும் துய்த்திட
நூல்பல இயற்றிடும் நுண்மாண் நுழைபுலம்;
மாணவர் தம்மை மதிப்புடன் போற்றி
ஆற்றுப் படுத்திடும் எங்கள் ஆசான்;



இளங்குமரனார் பெருமை இயம்பிட
இயலுமோ எம்மால் இயம்பிடுவீரே!
பகுப்பாய் வுநோக்கில் இவர்பரி மேலழகர்;
நூல்நலன் நுவல்வதில் நச்சினார்க் கினியர்;
அருங்கலை அறிவில் அடியார்க்கு நல்லார்;
தெளிவுறப் புகல்வதில் தெய்வச் சிலையார்;
மேடை மேவிடும் மென்றமிழ்த் தென்றல்;
தமிழ்ப்பகை சாடிடும் நக்கீர நெருப்பு;
மூச்சும் பேச்சும் தமிழெனக் கொண்டு
எண்ணும் எழுத்தும் தமிழ்க்கென ஆக்கி
எமக்குத் தலைவராய் இலங்கிடும் அறிஞரே!
கொள்கை இமயமே! பல்கலைக் கொண்டலே!
அறிவுக் கடலே! அருங்குணப் பொதியிலே!
பல்லாண்டு பல்லாண்டு பாடி வணங்கினோம்!
பண்புளோர் சொல்லாய் பாவலர் பொருளாய்
வள்ளுவன் மறையாய் காப்பியன் நூலாய்
உலகெலாம் போற்றிட வாழி! ஊழி!
வாழ்த்தி மகிழ்கிறோம்! வணங்கிப் புகழ்கிறோம்!
வாழிய பெரும! வண்டமிழ் போன்றே!


மறைமலை இலக்குவனார்
52/3 சௌந்தரியா குடியிருப்பு,
அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 101.



திருவள்ளுவர் நிலையம்,
7. இராமன் தெரு,
திருநகர், மதுரை-
625006.
30.06.2017

பேரன்புப் பெருந்தகைச் செல்வீர்,
வணக்கம். வாழிய நலனே!

தாங்கள் முன்னின்று வழங்கிய கனடா - தமிழ்த் தொட-
[illegible], விரைவாக அமைந்தது தாங்கள் செந்தமிழில்
எழுதிய, 'வாழிய பெரும வண்டமிழ் போன்றே' என்னும் அகவல்!
தங்கள் பெருந்தக்க வாழ்த்துக்குப் பெருநன்றியேன்!
[illegible]

வள்ளன்பின்
இரா. இளங்குமரன்

## அந்தணர் இளங்குமரனார் -நாக இளங்கோவன்

அந்தணர் என்ற சொல்லுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் புலவர்.இரா.இளங்குமரனார். செந்தமிழ் அந்தணர் என்றே அழைக்கப்பட்டார். இவரின் தனித்தமிழ் இயக்கம் என்ற நூல் அனைவரும் படிக்க வேண்டிய நூல். காவிரிக் கரையில் திருச்சி-குளித்தலை சாலையில் உள்ள அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை என்ற குடிலமைத்து தமிழே தவமாக வாழ்ந்தார். பின்னர் மதிரைக்குப் பெயர்ந்தார் என்று அறிந்தேன். சில கூட்டங்களில் பார்த்திருந்தாலும், தமிழ்க் குடும்பச் சந்திப்பு என்ற வருடாந்திர சந்திப்பு ஒன்றில் (திருவானைக்கா) அவர் நடத்திய தமிழ் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டது மறக்க இயலாதது.

2009ல், தமிழெழுத்துச் சீரழிப்பு முயற்சியை வா.செ.குழந்தைசாமி நிகழ்த்தியபோது, அதை அறிந்ததும், முதலில் வெகுண்டெழுந்த தமிழ் அறிவுலகின் பெரும்புலவர் இவர் ஒருவரே என்றால் மிகையல்ல. எழுத்துச் சீரழிப்பை எதிர்த்து, புதுச்சேரி வலைப்பதிவர் சிறகம் ( நண்பர் சுகுமாரன் இரா. ) நடத்திய கண்டணக் கூட்டத்தில், இவரின் நூல் வெளியிடப்பட்டது. நல்ல தாக்கத்தை அது ஏற்படுத்தியது என்பதை நண்பர் சுகுமாரனொடு நானும் நாங்களும் இவ்வேளையில் நினைவு கூர்கிறோம்.

வள்ளுவநெறி நின்ற தமிழ் வள்ளல், நிறைவாழ்க்கை வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்; உலகியலின்படி. அவரின் ஆன்ம அமைதிக்கு இறையை வேண்டுகிறேன்.

## அழுது அஞ்சலிக்கிறோம் -சோழா நாகராசன்

தமிழே மூச்சென வாழ்ந்த எங்கள் ஐயா இளங்குமரன் மறைந்தார்! ஆசான் தமிழ்க்கூத்தனோடு நாங்கள் குன்றத்தில் குழாமமைத்த காலத்திலேயே அவரை அறிவேன்.

அவரின் திருநகர் பாவாணர் நூலகம் அப்போது எங்கள் கனவகம்!

"கலைவாணரைக் கையிலெடுத்திருக்கிறார்!" - என்று என்னைக் குறித்து பெரியார் நெறியாளர் அருமை நண்பர் வரதராசன் இளங்குமரனாரிடம் ஒருமுறை சொன்னபோது என்னிடம் அன்பொழுக, "அவர் தக்கவர்! அவரைப் பரப்பும் நீ பாராட்டுதலுக்குரியவன்!" என்றார் மனமினிக்க.

திருக்குறளை உயிரெனக் கருதி வாழ்ந்தவரின் இன்னுயிர் இன்று பிரிந்துவிட்டது. பெரும் சோகம்.

இதயத்தால் அழுது அஞ்சலிக்கிறோம் ஐயா!!

# பூங்காவில் இளங்குமரனார் -இராமசாமி செல்வராசு

*வையகத்திலிருந்து விடைபெற்றுச் செல்கிறார் இளங்குமரனார். ஆழ்ந்த இரங்கல்! அவரைப் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன்னர் அறியக் கிடைத்தது ஒரு நல்வாய்ப்பு.*

2007 சூலை 29: "அவரவர் கடமையை ஒழுங்காகச் செய்வதே தவம்" என்று தனது எண்பத்தொரு வயதிலும் தமிழுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் இளங்குமரனாரின் செவ்வி தமிழின்பால் ஆர்வமுள்ளவர்கள் தவற விடக்கூடாத ஒன்று. வட அமெரிக்காவின் தமிழ்ச்சங்கப் பேரவையின் ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டவரை நேர்கண்டு அந்த உரையாடலைக் கடந்த வார 'பூங்கா' இதழ் வெளியிட்டிருக்கிறது.



பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்றபின்னும் தனது ஓய்வூதியத்தை வைத்துத் திருச்சிக்கருகே திருவள்ளுவர் தவச்சாலை என்று அமைத்துத் தமிழாய்வுக்குத் தொண்டாகவும் பல வசதிகளும் செய்துகொண்டிருக்கும் இளங்குமரனார் சுமார் நானூறு புத்தகங்களை வெளியிட்டிருப்பதாகவும் கூறுகிறார்."

மேலும் தொடர: [பூங்காவில் இளங்குமரனார்](http://blog.selvaraj.us/archives/242) (http://blog.selvaraj.us/archives/242)

# புலவர் இரா.இளங்குமரன்: நினைத்துக்கொள்ளவேண்டியவர்

**-அ. ராமசாமி**

சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகச் சொற்பொழிவுகள் வரிசை நூல்களின் ஆசிரியராகவும், அப்பதிப்பகத்தின் பதிப்பாசிரியர் என்ற வகையிலும் அறிந்திருந்த பெயர்.மதுரைப்பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணவனாக நுழைந்த காலத்தில் வருகைப்பேராசிரியர்கள் என்ற வகைப் பாட்டில் வந்து வேலை செய்து கொண்டிருந்தவர்களுள் ஒருவராக புலவர் இரா. இளங்குமரன் இருந்தார். புலவர்கள் ந.சேதுரகுநாதன், க. வெள்ளைவாரணர் போன்றோரும் அங்கு வந்து பதிப்புப் பணிகளில் ஈடுப்பட்டிருந்தனர். அவர்களைத் துறை பல்கலைக்கழக வளாகத்தில் பார்த்ததுண்டு. ஆனால் தனியாகச் சந்தித்துப் பேசியதில்லை என்னை நவீனத்துவனாக நினைக்கச் செய்தது சிறுபத்திரிகைகளின் வாசிப்பு. அதனால் மரபுத்தமிழ்ப் போக்கிற்கெதிரான மனோபாவம் கொண்டவனாகவும் நினைத்துக்கொண்டிருந்தேன். அதனால் இந்தப் புலவர்களோடு உரையாடுவதற்கு எதுவுமில்லை என்றும் நினைத்துக்கொண்டேன். அப்படி உரையாடுபவர்களோடு அருகிருந்து கவனித்த நிலையில் அவர்களின் சமகாலப்பார்வை பாரதிதாசன் பரம்பரைக்கவிகளின் வழியாகத் தமிழ் இலக்கியத்தைப் பார்க்கும் பார்வையாக இருந்தது என்பதை உணரவும் முடிந்தது.

முதுகலைப்படிப்புக்குப் பின்னால் எனது ஆய்வுத் தலைப்பு, இடைக்காலத் தமிழ் இலக்கியங்களை மையமிட்டதாக மாறியபோது அவர் பதிப்பித்த நூல்களை வாசிக்கவேண்டியவனாக மாறினேன். இடைக்காலம் மற்றும் பின்னிடைக்காலத் தமிழ் இலக்கிய நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் நூலகங்களின் பட்டியலைத் தொகுத்துக்கொண்டு ஆய்வுக்கான தரவுகளைத் தேடத்தொடங்கியபோது திரும்பத்திரும்ப என்னை உரசிய பெயர் புலவர் இரா.இளங்குமரன். முதலில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்கும், மதுரைத் தமிழ்ச்சங்க நூலகம் இருந்த செந்தமிழ்க்கல்லூரிக்கும் சென்று அங்கேயே அமர்ந்து வாசிக்க வேண்டியிருந்தது. வீட்டிற்குக் கொண்டுவந்து வாசிக்க முடியாது. தரமாட்டார்கள். தந்தாலும் திரும்பக் கொண்டுவரும்போது அப்படியே திரும்பக் கொடுக்க முடியாது. அந்த நூல்கள் எல்லாம் செம்பழுப்பு நிறத்தில் மிகப்பழையனவாக இருந்தன. நகல் எடுக்கும் எந்திரங்கள் வராத காலகட்டம். நகலெடுக்கும் எந்திரங்களுக்குள் வைத்து எடுத்தால் நொறுங்கிப் போய்விடும் நிலையில் தான் இருந்தன.

இரண்டு நூலகத்தில் இருந்தவர்களும் புலவர் இளங்குமரன் பெயரைச் சொன்னார்கள். மதுரையின் புறநகரான திருநகரில் வசிக்கிறார் என்ற தகவலையும் தந்தார்கள். எனது நெறியாளரோடு உரையாடியபின் அவரை நாடும் முயற்சியைத் தொடங்கினேன். அப்போது மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கிளம்பி திருப்பரங்குன்றம், திருநகர் வழியாக வடபழஞ்சி என்ற சிற்றூருக்கு ஒரு நகர்ப்பேருந்து உண்டு. அந்த சிற்றூரின் இரயில்வே நிலையத்திற்குப் பெயர் மதுரைப் பல்கலைக்கழகம். எனது முதுகலை வகுப்புத்தோழிகள் இரண்டுபேர் அந்தப் பேருந்தில் வருவார்கள். அவர்களில் ஒருவர் ஆய்வுப்படிப்பிலும் தொடர்ந்தார். அவர் மூலம் புலவரின் வீடிருக்கும் நிறுத்தத்தில் இறங்கி முதல் நாள் சென்று அறிமுகம் செய்துகொண்டு, தஞ்சையிலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் அவர் பெயரைச் சொன்னதைச் சொல்லி அறிமுகம் செய்துகொண்டேன். முதல் சந்திப்பில் என் ஆய்வு, அதன் நோக்கம், அதற்குத் தேவைப்படும் நூல்களின் தொகுப்புகள் போன்றவற்றைக்

கேட்டுக்கொண்டார். அவரும் சிலவற்றைச்சொல்லிப் பட்டியலைப் பெரிதாக்கினார். அத்தொகுப்புகளில் அவரிடம் என்னவெல்லாம் இருக்கின்றன என்று சொன்னார். தாராளமாக வரலாம்; வந்து படிக்கலாம். என்று சொல்லி அவரது சொந்த நூலகத்தின் அறையைத் திறந்துவிட்டார். முறையாக எண்ணிட்டு அடுக்கி வைத்திருந்தார். நூல் பெயரைக் கொண்டு உடனே எடுத்துவிடுவார். ஒவ்வொரு நாளும் போனவுடன் இரண்டு நூல்களை எடுத்துத் தருவார். குறிப்புகள் எடுத்துக் கொண்டு அங்கேயே வைத்துவிடுவேன். ஒருவாரம் முடிந்தநிலையில் சனி, ஞாயிறுகளில் வாசிக்க என்று இரண்டு நூல்களைத் தந்து கவனமாகக் கொண்டுவந்துவிடுங்கள் என்றார். யாருக்கும் தருவதில்லை; நீங்கள் தொடர்ந்து வருவதால் தருகிறேன் என்று சொல்லித் தந்தார்.

இரண்டாவது வாரத்தில் இரவில் படிக்க என்று ஒரு நூலைக் கொடுத்தனுப்பினார். முதல் கட்டத்தில் மூன்று வாரங்கள் தொடர்ந்து போய் வந்தேன். பின்னர் சிறிய இடைவெளி. திரும்பவும் அங்கு சென்றேன். எனது ஆய்வுத்தலைப்பான நாயக்கர் காலத்தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலான நூல்கள் அவரிடம் இருந்தன. வாசித்தபின் கேட்கும் சந்தேகங்களுக்கு விரிவான பொருளுரைகள் சொல்வார். ரசனை சார்ந்த விளக்கவுரைகளும் கிடைக்கும்.

பெரியார் நிலையம் - திருப்பரங்குன்றம் - வடபழஞ்சி பேருந்து வகுப்புகள் தொடங்கும் நேரத்திற்கு முன்னால் பல்கலைக்கழகம் வந்துசேர்ந்துவிடும். அந்தப் பேருந்து பல்கலைக்கழகத்திற்கு வருபவர்களை இறக்கி விட்டுவிட்டுத் திரும்பும்போது அதில் ஏறித் திருநகரில் இறங்கி அவர் வீட்டிற்குச் சென்றுவிடுவேன். மதிய உணவும் எடுத்துச்செல்வேன். பள்ளிக்காலத்தில் அப்படி மதிய உணவோடு சென்றதுண்டு.

தனித்தமிழ் இயக்க ஆதரவாளராக அறியப்பெற்ற அவரிடம் விவாதிக்க ஒன்றும் இல்லை என்ற மனநிலையை மறந்து எனது ஆய்வுக்கான தரவுகள், விளக்கங்கள் நிரம்பிய நூலகத்தைத் தனக்குள்ளும் தன் வீட்டிலும் வைத்திருந்த வழிகாட்டியாக மாறினார். அவரது மறைவு நாளில் நினைத்துக்கொள்ள இந்த நினைவுகள் எனக்குள் இருக்கின்றன.



# தமிழாய்ந்த பெருமகனார்

## -தவத்திரு .தயானந்த சந்திரசேகர சுவாமிகள்

இன்பத்தமிழாய்ந்த பெருமகனார், முதுமுனைவர் இரா. இளங்குமரனார் ஐயா மறைவு செய்தி நமக்கு பெரும் மனத்துயரத்தை அளிக்கிறது. தமிழ்த் துறையில் கரை கண்டவர். அவரது மறைவு தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பெரும் இழப்பாகும்.

2005-ல் நாம் வெளியிட்ட திருமந்திர ஆய்வுரைக் களஞ்சிய நூலிற்கும், 2011-ல் வெளியிடப்பட்ட முத்தமிழ்க் களஞ்சிய நூலிற்கும் ஆய்வுரைகளை வழங்கி நமது ஆதீனப் பணிக்கு சிறப்பு சேர்த்த பெருந்தகை. நம் மீது அன்பு பூண்டொழுகிய உயர் பண்பாளர். 2013-ல் நமது திருமடத்திற்கு தமிழ் அறிஞர் குழுவோடு (சிலம்பொலியார் சு.செல்லப்பனார், மேனாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, புதுகை தருமராசன் உள்ளிட்டோருடன்) இணைந்து வந்த போது, நமது பணிகளை பாராட்டியதோடு, தனியாக ஒரு முறை திருமடத்திற்கு வருவதாக கூறினார்கள். நாம் மிகவும் மகிழ்ந்தோம்.

தமிழ் இலக்கியத் துறையில் அவரின் அர்ப்பணிப்பான சீரிய பணி என்றும் நினைவு கூர்ந்து போற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

ஐயா அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவருடன் பயணித்த தமிழாய்ந்த அறிஞர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

தவத்திரு .தயானந்த சந்திரசேகர சுவாமிகள்<br>
ஆதீனகர்த்தர், திலகவதியார் திருவருள் ஆதீனம்,<br>
புதுக்கோட்டை.



# தமிழ்க்கடல் இரா. இளங்குமரனார் மறைவு!

## -முனைவர் மு.இளங்கோவன்,புதுச்சேரி

திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவி அன்னைத் தமிழுக்கும் அருமறையாம் திருக்குறளுக்கும் தொண்டாற்றிய மூதறிஞர், தமிழ்க்கடல் இரா. இளங்குமரனார் இன்று (25.07.2021) இரவு 7.30 மணியளவில் தம் மதுரை இல்லத்தில் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து, பெருந்துயருற்றேன்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் அறிஞர் பெருமக்களுள் தமிழ்க்கடல் இரா. இளங்குமரனார் குறிப்பிடத் தகுந்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியுடைய இரா.இளங்குமரனார் பள்ளி ஆசிரியராக விளங்கியவர். பின்னர் நூலாசிரியர், பாவலர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர், உரையாளர் எனப் பல முகங்களைப் பெற்றுத் தமிழுக்கு ஆக்கமான பல பணிகளைச் செய்துள்ளார். இவர் எழுதிய நூல்கள் பல நூறாக விரியினும் இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி, யாப்பருங்கலம், புறத்திரட்டு, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைபாடினியம், தேவநேயம் உள்ளிட்ட நூல்கள் இவர்தம் தமிழ்ப்பணிக்கு என்றும் நின்று அரண் சேர்க்கும். திருக்குறள் வழியில் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட திரு. இளங்குமரனார் வாழும் வள்ளுவராகவே விளங்கியவர்.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் காவிரிக்கரையின் தென்புறம் அமைந்துள்ள அல்லூர் என்னும் ஊரில் திருவள்ளுவர் தவச்சாலை அமைத்துப், பாவாணர் நூலகம் கண்டு, தவப் பள்ளியில் உறைந்த நாள்போக எஞ்சிய நாளெல்லாம் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று திருக்குறள் உரைப்பொழிவுகள் வழங்கியும் திருமணங்களைத் தமிழ்வழியில் நடத்தியும் நல்லற மணமக்களை இல்லறப்படுத்தியும் வாழ்ந்தவர்.

கடந்த முப்பது ஆண்டுகளாக நம் ஐயாவுடன் பழகும் பெரும்பேறு பெற்றிருந்தேன். அவர்தம் திருவள்ளுவர் தவச்சாலையில் இருந்த பாவாணர் நூலகத்தை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியவர்களுள் யானும் ஒருவன். ஐயாவின் உரைகளைப் பலமுறை செவிமடுத்துள்ளேன். உரையாடியுள்ளேன். என் நூல்களுக்கு அணிந்துரை வழங்கியும், நான் ஏற்பாடு செய்த பல நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஊக்கமொழிகள் வழங்கியும் என்னைப் பெருமையுறச்செய்தவர். என் நூலொன்றில் "இளங்கோவனார் அழுந்தக் கற்கும் ஆர்வலர். நிறையறிவுபெறுவான் நெடிதுழைப்பாளர். முத்தமிழ்த் திறமும் முத்திரை பதிக்கத் திகழவிருக்கும் முனைவர்" என்று என்னை அன்பொழுக அறிமுகம் செய்துள்ளார்(1995). அவர்தம் உரைகள் சிலவற்றைப் பதிவு செய்து இணையவெளியில் பலரின் பார்வைக்கும் வைத்துள்ளேன். தமிழ்ப் பெருங்கடலாக விளங்கிய ஐயா இளங்குமரனாரின் இழப்பினை உலகத் தமிழர்கள் தங்கள் குடும்பத்து இழப்பாக எண்ணி வருந்துவர். அந்த அளவு அவர் உலகப் பெருந்தமிழராக விளங்கியவர். அன்னாரை இழந்துவருந்தும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், தமிழ் உணர்வாளர்கள் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகின்றேன். ஐயாவின் வாழ்க்கை குறித்து முன்பு எழுதிய என் பதிவினை மீள்பதிவாகப் பதிவுசெய்கின்றேன்.

இரா. இளங்குமரனாரின் தமிழ் வாழ்க்கை:

இரா.இளங்குமரானார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் வாழவந்தாள்புரம் என்னும் சிற்றூரில் 1930 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முப்பதாம் நாள் பிறந்தவர். தந்தையார் படிக்கராமர், தாய் வாழவந்தம்மையார். தந்தையாரிடம் இருந்த தமிழறிவு, கணக்கு அறிவு மகனாரிடத்து நின்று நிலவியது. தொடக்கப்பள்ளி ஆசிரியராகத் தம்மை ஆயத்தம் செய்து கொண்டு தம் பச்சிளம் பருவத்திலேயே 08.04.1946 இல் ஆசிரியர் பணிமேற்கொண்டவர்.

பின்னர்த் தனியே தமிழ் கற்றுச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழியாகப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றிபெற்றவர்(1951). பள்ளிப்பருவத்தில் சொற்பொழிவாற்றும் திறன் பெற்றிருந்த இரா.இளங்குமரனார் தம் பதினான்காம் அகவை முதல் பாடலியற்றும் திறன்பெற்றிருந்தவர். இப்பயிற்சி பின்னாளில் குண்டலகேசி என்னும் காவியம் உருவாக வழிவகுத்தது. இக்காவியம் 1958 ஆம் ஆண்டு மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் அரங்கேற்றப்பட்டது.

மதுரை பாரதி புத்தக நிலையத்தின் வாயிலாகப் பல நூல்கள் வெளிவரத் தொடங்கின. பல ஆண்டுகளாகத் தமிழாசிரியர் பணிபுரிந்தாலும் இவர் விரும்பிச்செய்தது நூலாக்கப் பணிகளேயாகும். பல்வேறு அமைப்புகளில் இணைந்தும் பணிபுரிந்துள்ளார். தமிழ்க்காப்புக் கழகச்செயலாளர், மதுரை மாவட்டத் தமிழாசிரியர் கழகச்செயலாளர், தேர்வுக்குழு அமைப்பாளர் உள்ளிட்ட பல பொறுப்புகளை வகித்துத் திறம்படப் பணிபுரிந்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சில காலம் அறிஞர் தமிழண்ணல் முயற்சியால் விருந்து பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

அறிஞர் இரா.இளங்குமரனார் அவர்களின் நூல்கள் யாவும் தமிழ்மண் இளவழகனார் அவர்கள் வழியாக மறுபதிப்பும் செம்பதிப்புமாக வெளிவந்துள்ளன. அயல்நாடுகள் பல சென்று தமிழ்ப்பொழிவு ஆற்றிய பெருமைக்கு உரியவர். தமிழக அரசு இவர்தம் தமிழ்ப்பணியை மதித்துப் பல சிறப்புப் பரிசில்கள், விருதுகளை வழங்கியுள்ளது. முனைவர் மு.தமிழ்க்குடிமகன், முனைவர் கா.காளிமுத்து உள்ளிட்ட அரசியல் சார்புற்ற தமிழ் அறிஞர்கள் இரா.இளங்குமரனாரைப் போற்றி மதித்தவர்கள். தமிழ்வழிக் கல்விக்காகவும் குறளியக் கருத்துக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர். பல்வேறு அமைப்புகளும், கல்வி நிறுவனங்களும் இவரைப் பாராட்டிப் போற்றியுள்ளன.

தொடர்புடைய கட்டுரைகள்:

https://muelangovan.blogspot.com/2008/10/blog-post_22.html
https://muelangovan.blogspot.com/2010/04/blog-post_17.html
https://muelangovan.blogspot.com/2011/09/blog-post_05.html

காணொளிகள்:

தனித்தமிழியக்கம் குறித்து https://www.youtube.com/watch?v=6nYDsaUJswg
தொல்காப்பியச் சிறப்புகள் குறித்து: https://www.youtube.com/watch?v=fURvAXvwjvc
தமிழ் மரபுத்திருமணங்கள் நடத்துவது எப்படி?
https://www.youtube.com/watch?v=bo09sOb3y3Q

# மொழியறிஞர் இரா.இளங்குமரனார் மறைவு

## - தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் இரங்கல்

தமிழகத்தின் மூத்த மொழியறிஞர், ஆய்வறிஞர், தமிழிய வரலாற்று வரைவாய்வாளர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தமிழியக்கச் செயற்பாட்டாளர் இரா.இளங்குமரனார் அவர்களின் மறைவுக்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநிலக்குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மதுரை காமராாசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சொற்பிறப்பு அகரமுதலி திட்டத்தில் மொழியறிஞராக செயலாற்றிய அவர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் முதுமுனைவர் பட்டம் அளிக்கப்பட்டு கவுரவிக்கப்பட்டவர். திருக்குறளுக்கு பேருரை எழுதியவர்.

காணாமல் போய்விட்டது எனக் கருதப்பட்ட தமிழ் இலக்கண நூலாம் காக்கை பாடினியத்தை கண்டுபிடித்து பதிப்பித்தவர். தமிழில் பல்வேறு துறைகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்.

தனித்தமிழ் இயக்கத்தில் பற்றுகொண்ட அவர், தேவநேயப் பாவாளரின் ஆய்வுப்பிழிவான ‘தேவநேயம்’ பத்துத் தொகுதிகளை தொகுத்தவர். அதேபோன்று செந்தமிழ் சொற்பொருள் களஞ்சியம் 14 தொகுதிகளைக் கொணர்ந்தவர்.

சமக்கிருதச் சடங்குகளை மறுத்து குரள் வழியில் தமிழ் வழியில் திருமணம், புதுமனை புகுவிழா உள்ளிட்ட நிகழ்வுகளை தமிழில் நடத்துவதை ஓர் இயக்கமாக முன்னெடுத்தவர். அவருடைய தனித்துவமான ஆய்வுகள் அவருக்கு என்றென்றும் பெருமை சேர்க்கும்.

அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கும் தமிழ் ஆய்வுலகத்திற்கும் தமுஎகச சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,<br>
மதுக்கூர் இராமலிங்கம் மாநிலத்தலைவர் (பொ)<br>
ஆதவன்தீட்சண்யா- பொதுச்செயலாளர்

# தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அவரது சிறப்பு மிகுந்த அமைச்சர்கள் மற்றும் கட்சியினருக்கும் மிக்க நன்றி

தமிழ் அறிஞர்களின் கோரிக்கையை ஏற்று மூதறிஞர் தமிழ் கடல் செந்தமிழ் அந்தணர், இளங்குமரனார் அய்யா அவர்களது உடல் நல்லடக்கம் இன்று (சூலை 26) நடந்தபோது தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வருகை தந்து அன்னாரது உடலுக்கு மரியாதை செய்தார்.

மேலும் அரசு மரியாதை அளிக்கப்பட்டு காவல்துறையினர் துப்பாக்கி ஏந்தி முறைப்படியான மரியாதை செய்தனர் இது தமிழுக்கு செய்யப்பட்ட மரியாதையாகவே கருதப்படுகிறது எனவே மிகுந்த மரியாதைக்குரிய அவருக்கு மிகுந்த மரியாதைக்குரிய வகையில் தமிழ்நாடு அரசு சார்பாக மரியாதை செய்யப்பட்டதற்கு நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறோம்.

இப்படிக்கு,
தமிழ் இராசேந்திரன் செயலாளர்
கரூர் தமிழ்ச்சங்கம்



# ஆய்வுக்கு ஓய்வு! இளங்குமரன் ஐயா

## - இலக்குவனார் திருவள்ளுவன்

*நம்மை விட்டுப் பிரிந்தார்!*

*உண்ணச் சிறிது போதும்!*

*உறங்கப் படுக்கைத் தேடேன்!*

*எண்ணப் பொழுது வேண்டும்!*

*எழுத உரிமை வேண்டும்!*

என்பதை முழக்கமாகக் கொண்டு வாழ்ந்த ஆய்வறிஞர், தமிழ்க்கடல், முதுமுனைவர் இரா.இளங்குமரனார் இன்று(ஆடி 09, 2052 / 25.07.2021) இரவு 7.45 மணிக்குத் திருநகரில் அவரது இல்லத்தில் மறைந்தார். பள்ளி ஆசிரியர், நூலாசிரியர், பாவலர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், ஆய்வாளர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர், சொற்பொழிவாளர், தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர் எனப் பல்வேறு நிலைகளில் வாழ்க்கைப் பயணத்தை நடத்தியவர் பயணத்தைக் காலன் முடித்து விட்டான்.

இளங்குமரனார் திருநெல்வேலி மாவட்டம் வாழவந்தாள்புரம் என்னும் சிற்றூரில் படிக்கராமர் – வாழவந்தம்மையார் இணையருக்கு எட்டாம் திருமகனாகப் பிறந்தார். அதனால் கிருட்டிணன் எனப் பெயர் சூட்டப்பட்டார். பின்னர் இப்பெயரை அகற்றி இளங்குமரன் என்னும் தமிழ்ப்பெயரைச் சூட்டிக் கொண்டார். அவர் பிறந்தநாள் வெவ்வேறு வகையாக அவர் குறித்த கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளது. ஆனால், ஐயா, தம்முடைய 'ஒரு புல்' என்னும் தன் வரலாற்று நூலில் 30.01.1930 எனக் குறித்துள்ளார். எனினும் இந்நாள் பள்ளியில் சேர்க்கும்பொழுது ஆசிரியர் தந்த நாள் என்றும் குறித்துள்ளார்.

பள்ளிப்பருவத்திலேயே, தம் 15-ஆம் அகவையிலேயே சொற்பொழிவாற்றும் திறனும் பாடலியற்றும் திறனும் பெற்றுச் சிறப்புற்றிருந்தார். தம் 18-ஆம் அகவையிலேயே ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார்.

இவரது நூல்கள் ஏறத்தாழ 400.2004இல் வெளிவந்த இவரின் தன்வரலாற்று நூலில் 232 நூற்பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் சொல் வளமே 80 தொகுதிகள் வந்தன. மேலும் பல தொகுப்பு நூல்கள் வந்துள்ளன. “செந்தமிழ் சொற்பொருட் களஞ்சியம்” நூல் மட்டுமே நாலாயிரத்துத் தொண்ணூறு பக்கங்களைக் கொண்டதாகும். 'காக்கைபாடினியம்' என்னும் இலக்கண நூலை மீட்டுருவாக்கம் செய்து தமிழுலகிற்கு அளித்தது காலத்தால் அழியாத பணியாகும். திருக்குறள் கட்டுரைத் தொகுப்பு(10) என்னும் இவரது நூலை 1963 ஆம் ஆண்டு நேரு வெளியிட்டார். சங்க இலக்கிய வரிசையில் புறநானூறு என்னும் இவரது நூலை 2003 ஆம் ஆண்டு அபுதுல் கலாம் வெளியிட்டார்.

2012 ஆம் ஆண்டு வாணாள் அருவினையாளருக்கான பச்சமுத்து பைந்தமிழ் விருது இவருக்கு வழங்கப்பட்ட விருதுகளில் குறிக்கத்தக்கது. அதுபோல் பாரதிதாசன் பல்கலைக் கழகம் இவருக்கு முதுமுனைவர் (D.Lit.) பட்டம் வழங்கியுள்ளதும் சிறப்பான செய்தியாகும்.

இவர் வகித்த தமிழ் அமைப்புகளின் பொறுப்புகளில் குறிப்பிடத்தகுந்தது, தமிழ்ப்போராளி பேரா.முனைவர் சி.இலக்குவனார் தலைவராகச் செயல்பட்ட தமிழ்க்காப்புக்கழகத்தின் பொதுச்செயலாளர் பதவியாகும். தமிழ்க்காப்புக்கழகம்தான் இந்திஎதிர்ப்புப் பாசறையாக விளங்கியது என்பதும் இதன் முன்னெடுப்புப்பணிகளாலும் வழிகாட்டுதலாலும் இந்தி எதிர்ப்புப் போர் தீவிரமடைந்து இந்தி விரட்டப்படவும் பேராயக்(காங்கிரசு)கட்சி ஆட்சி அகன்று இன்றுவரை மீள இயலவில்லை என்பதையும் வரலாறு அறிந்தோரும் கடந்த நூற்றாண்டுத் தமிழார்வலர்களும் அறிவர்.



ஒரு முறை புலவர்மணியார் (அவ்வாறுதான் இளங்குமரனாரைப் பேரா.சி.இலக்குவனார் குறிப்பிடுவார்.) விருதுநகரில் பணியாற்ற வந்து பேரா.சி.இலக்குவனாரைச் சந்தித்தார். அவர் வந்த உடனே பேராசிரியர் நகராட்சியில் இருந்து ஆணை வந்ததா என்று கேட்டதும் வியப்படைந்தார். இவர் விண்ணப்பம் குறித்து நகராட்சியில் கேட்ட பொழுது "தக்கவர், பணி யாணை வழங்குக" எனத் தெரிவித்ததும், இவர் வரும் முன்னரே இவர் குடிபுக வீடு பார்த்து வைத்ததும் அறிந்து வியப்பும் மகிழ்ச்சியும் உற்றார்; "ஐயா, எங்கள் ஊர் அருகேயே எனக்கு வேலை கிடைத்துள்ளது. தங்கள் தொடர்பு வேண்டும் என்றுதான் இங்கே வந்தேன். நீங்கள் இங்கேதானே இருப்பீர்கள்" என்றார். பேராசிரியர் இலக்குவனார் புன்முறுவல் பூத்தார். உடனிருந்த நண்பர், பேராசிரியர் கல்லூரியில் இருந்து விலகி வேறிடம் செல்கிறார் எனக் கூறியதும் தன் எண்ணம் சுக்கல் நூறாக உடைந்தது எனக் குறிப்பிடுகிறார் இளங்குமரனார். இலக்குவனார் இல்லாத ஊரில் தனக்கு வேலை தேவையில்லை என அவ்வேலையில் சேராமல் திரும்பி விட்டார் (பக்கம் 96, ஒரு புல்)

ஆனால், பின்னர் இளங்குமரன் ஐயா, மதுரையில் திருப்பரங்குன்றம் (இருப்பு) திருநகர் மு.மு.உயர்நிலைப்பள்ளிக்கு வேலைக்கு வந்ததும் பேராசிரியர் இலக்குவனார் திருநகரில்தான் உள்ளார் என அறிந்ததும் பெரு மகிழ்வுற்றார். பேராசிரியருடன் இணைந்து தமிழ்ப்பணி யாற்றினார் புலவர்மணியார்.

திருநகரில் பாவாணர் ஆராய்ச்சி நூலகம் அமைத்தார்(1983). திருச்சிராப்பள்ளி அருகே அல்லூர் என்னும் ஊரில் திருவள்ளுவர் தவச்சாலை நிறுவிய பொழுது இந்நூலகத்தை அங்கு மாற்றினார். அப்பொழுது ஏறத்தாழ 17000 நூல்கள் அங்கே நிறைந்திருந்தன. திருநகருக்கு நிலையாக மீளக் குடி புகுந்ததும் நூலகமும் இடம் மாறிற்று.

தமிழ்ப்போராளி பேரா.சி.இலக்குவனார் தமிழ் உரிமைப்பெருநடைப்பயணம் மேற்கொண்டமையாலேயே இந்தியப் பாதுகாப்புச்சட்டத்தின்படித் தளையிடப்பட்டவர். எனவே, அவர் நினைவாகத் தவச்சாலையில் தமிழ் உரிமைப்பெருநடைப்பயண மேடையையும் அமைத்தார்.

தமிழ் உறவர்களையே குடும்ப உறவர்களாகக் கருதுபவர் பேரா.சி.இலக்குவனார். திருநகரிலேயே குடிபுகுந்து நாளும் சந்திக்கும் வாய்ப்பு பெற்ற தமிழாசிரியர் இளங்குமரனார் எங்கள் உறவினரானதில் வியப்பில்லை. இரண்டாவது அண்ணன் பேரா.மறைமலை இலக்குவனார், அடுத்தவர் புலவர் திருவேங்கடம், அடுத்த நான்(இலக்குவனார் திருவள்ளுவன்) தம்பி இ.நல்லபெருமாள், தம்பி அம்பலவாணன் ஆகியோர் அவரின் மாணாக்கர்களே என்பதிலும் மட்டற்ற மகிழ்ச்சி.

இளங்குமரன் ஐயா, பல்வேறு அமைப்புகளின் பொறுப்புகளில் இருந்தாலும் திருநகர், ஆர்விப்பட்டி, திருப்பரங்குன்றம் மாணாக்கர்களும் இளைஞர்களும் இணைந்து நடத்திய தமிழ்த்தொண்டர் குழுவின் நெறியாளராக இருப்பதை மகிழ்வாகக் கருதுவார். இதன் சார்பில் மாதந்தோறும் பட்டிமன்றங்களும் நடத்துவோம். ஐயாதான் நடுவர். ஓர் அணிக்கு நான் தலைவராகவும் மற்றோர் அணிக்கு நண்பர் பொன்.மனோகரன் தலைவராகவும் இருப் போம். இந்த மூன்றிலும் எப்போதும் மாற்றம் இல்லை. வெற்று நகைச்சுவைத் துணுக்குகள் நிறைந்திராமல் கருத்தாழம் மிக்க செய்திகளைச் சுவைபடக் கூறுவோம். ஐயா, மதிப்பெண் போட்டு யாருடைய அணி சிறப்பாக வாதிட்டது என்பார். முடிவிற்கு மக்களின் வாக்கெடுப்பிற்கும் விடுவார். மதுவிலக்கு நீக்கியது, இலங்கை-ஈழச் சிக்கல், தமிழ்ப்பயிற்றுமொழி நிறைவேற்றப்படாமை போன்ற சூடான செய்திகளே பட்டிமன்றக் கருவாக இருக்கும்.

திருமண மண்டபங்கள், திரையரங்கு முதலியவற்றில் நடைபெறும் நிகழ்விற்கு மக்கள் அரங்கு நிறைய வந்திருப்பர். ஒருமுறை நூலகம் தொடர்பான பட்டி மன்றத்திற்கு நடுவராக அழைத்தோம். “வறண்ட தலைப்பாக உள்ளது. மக்கள் வர மாட்டார்கள். வேறு சுவையான தலைப்பாக வையுங்கள்” என்றார் ஐயா. நான், “ஐயா, உங்கள் உரையைக் கேட்க என்று பெருங்கூட்டமே உள்ளது. நீங்கள் என்ன பேசினாலும் ஆர்வமுடன் கேட்பார்கள். எங்கள் மீதும் மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. நல்ல கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்வதுதான் நம் கடமை. தலைப்பை மாற்ற இயலாது” என்றேன். “இல்லை, இல்லை, ஆளில்லாக் கூட்டத்தில் பட்டிமன்றம் நடத்தி என்ன பயன்?” என்றார். “நீங்கள் கூட்டத்திற்கு வாருங்கள். அவ்வாறு வராவிட்டால் தலைமை தாங்க வேண்டா” என்றேன். “சரி” என்றார். உடன் வந்த நண்பர்கள் அவர் இல்லத்தை விட்டு வெளியே வந்ததும் “என்ன ஐயாவை எதிர்த்துப் பேசுகிறீர்கள். அவரிடம் வேறு தலைப்பைக் கேட்டு நடத்தலாமே” என்றனர். “இல்லை. இப்பொழுதுதான் அவருக்கு நம் மீது நம்பிக்கை வரும். நல்ல கருத்துகளைக் கேட்கும் அவையை ஏற்படுத்தி வைத்துள்ளோம். அவரது உரைக்கு மக்கள்ஆதரவு இருக்கிறது எனப் புரிந்து கொள்வார். என் மீது சினம் கொள்ளமாட்டார்” என்றேன். உண்மையில்

பிற பட்டிமன்றங்களை விட இதற்கு மிகுதியாகக் கூட்டம் வந்து கட்டடத்திற்கு வெளியேயும் நின்று கொண்டு உரைகளைக் கேட்டனர். தம் பேச்சைக் கேட்க வில்லை எனச் சினம் அடையாமல் துடிப்பான இளைஞர்கள் உணர்வையும் கருத்தையும் மதிப்போம் என்னும் பெருமிதப்பண்பு கொண்டு அவர் நடந்து கொண்டார். விழாவிலும் இது குறித்துக் குறிப்பிட்டார். மாணாக்கர்களையும் இளைஞர்களையும் தோழமை உணர்வுடன் நடத்தினார் என்பதற்கு இது சான்றாகும்.

புலவர்மணி இளங்குமரன் ஐயா 4500 இற்கு மேற்பட்ட மணவிழா,மணிவிழா, பிறந்தநாள் பெருமங்கலம், காதணி விழா, புதுமனை புகுவிழா முதலியவற்றைத் தமிழ் முறையில் நடத்தி உள்ளார்.எங்கள் மகள் பொறி தி.ஈழமலர்-பொறி வா.பாலாசி, மகன் பொறி தி.ஈழக்கதிர்-ஞா.செயலக்குமி ஆகியோர் திருமணங்களையும் சிறப்பாக நடத்தி எங்களை மகிழ்வித்தார்.



ஐயா நடத்தி வைத்த 4606 ஆவது திருமண நிகழ்வு
பொறி தி.ஈழக்கதிர்- பொறி ஞா.செயலக்குமி திருமண நிகழ்வு – (மாசி 13, 2049 | 25-2-2018)

1977 இல் தென்னகப்பண்பாட்டு மையம் சார்பில் உயரிய இலக்கிய விருது ஒன்றை அறிமுகப்படுத்தி வழங்க இருந்தனர். இளங்குமரன் ஐயா பெயரை நான் குறிப்பிட்டதும் கலைபண்பாட்டுத் துறைத்தலைவரும் அரசு செயலரும் ஏற்றுக் கொண்டனர். எனவே, நான் இளங்குமரன் ஐயாவிடம் விவரத்தைத் தெரிவித்து அவ்விருதை ஏற்க ஒப்புக்கொள்ளுமாறும் அவர் குறித்த குறிப்புகளைத் தருமாறும் கேட்டேன். "அன்பிற்கு நன்றி. புலமையை மதிக்கும் அரசு இல்லை. ஆள்வோரின் அன்பர்களுக்கே விருதுகள் வழங்கப்படும். எனவே, என் பெயரைக் குறிப்பிடாதீர்கள்" என்றார். நான், "நான் தெரிவிக்கும் கருத்தைத் துறைத்தலைவரும் செயலரும் மறுக்காமல் ஏற்பர். இப்பொழுதும் அவர்களின் ஏற்பு பெற்றதும்தான் உங்களிடம் பேசுகிறேன். ஆளுநரைத் தலைவராகக் கொண்ட தென்னகப்பண்பாட்டு மைய இயக்குநரும் எங்கள் பரிந்துரையை அப்படியே ஏற்றுக்கொள்வர். அவரிடமும் நான் பேசி விடுவேன். அமைச்சர்களின் குறுக்கீடோ, அரசுகளின் குறுக்கீடோ இருக்காது.

எனவே, இதனைத் தமிழுக்குக் கிடைக்கும் சிறப்பாகக் கருதி ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்றேன். “எனக்கு நம்பிக்கையில்லை. உங்கள் அன்பைத் தட்டமுடியாமல் இசைகிறேன்” என்றார். அவருக்கு இலக்கியத்திற்கான உயரிய விருது கொடுக்கவும் முடிவாகி விழா நாளும் உறுதியானது. ஐதராபாத்தில் விழா நடப்பதாக இருந்தது. ஆனால், விருது வழங்க இருந்த அப்போதைய குடியரசுத்தலைவர் சங்கர்தயாள் (சருமா) எதிர்பாராமல் மரணம் உற்றதால் விழா ஒத்திவைக்கப்பட்டுப் பின்னர் வேறு சூழல்களால் விருது வழங்கும் திட்டமே கைவிடப்பட்டது. இளங்குமரன் ஐயா கருதியவாறு, வேறு காரணத்தால் அவருக்கு விருது வழங்கப்படாமையும் நான் எண்ணியவாறு விருது வழங்கப்படுவது நின்று போனமையும் எனக்கு இன்றளவும் பெரிதும் வருத்தமாக உள்ளது.

நான் சில மாதங்களுக்கு முன்னர், என்னுடைய ‘வெருளி அறிவியல்’ நூல் 5 தொகுதிகள், ‘அறிவியல் சொற்கள் ஆயிரம்’ முதலான அறிவியல் நூல்களையும் வேறு நூல்களையும் அவருக்கு அனுப்பி வைத்திருந்தேன். அதுபோழ்து நடமாடும் அகராதிக் களஞ்சியமான புலவர் மணி இளங்குமரன் ஐயா, அவராகப் பேசி வாழ்த்தியது கிடைத்தற்கரிய பேறு. “நான் அறிவியல் தமிழ் வளத்தை வெளிப்படுத்தி நூல்கள் எழுதி வருகிறேன். ஆனால், தங்கள் நூல் தமிழில் உள்ள புத்தறிவியல் வளத்தை உணர்த்துவதாக உள்ளது. அகராதி அறிஞர்கள் தொடாத பணிகளை உங்களின் அறிவியல் சொல்லாக்கம் சிறப்பாக முடித்துள்ளது. இப்பணி சிறக்க நூறாண்டு வாழ்வாங்கு வாழ்க!” எனப் பலவாறாக வாழ்த்தினார். அவரது உயரிய நிலைக்கு அவரே பேசி வாழ்த்தியது அவரது எளிய பண்பையும் மாணாக்கனை மதிக்கும் உணர்வையும் விளக்கும் சான்றாகும்.

இளங்குமரன் ஐயா தம் உரைகளில் நிறைவாகத் தெரிவிக்கும் விழைவுகளை நாம் நிறைவேற்றுவது அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும். எனவே, அப்பாடலுடன் இதனை முடிக்கின்றேன்.

வள்ளுவம் பரவ வேண்டும்
வாழ்வியல் துலங்க வேண்டும்
உள்ளுவது உயர்வு வேண்டும்
உரையெலாம் செயலில் வேண்டும்
எள்ளுவ தவிர்க்க வேண்டும்
ஏதிலார் பொறுக்க வேண்டும்
கொள்ளுவது அறமாய் வேண்டும்
கொடை வளம் வேண்டும் வேண்டும்
வாழிய நலனே! வாழிய நிலனே!

## தமிழியக்கம் ஓய்ந்ததே! -மறைமலை இலக்குவனார்

இல்லாகியரோ காலை மாலை
அல்லாகியர் யாம் வாழும் நாளே!
நில்லா உலகில் நிலைத்த புலமையும்
எல்லாத் துறையிலும் நிறைந்த அறிவும்
பல்லாயிரம் நூல் படைத்த திறமும்
ஒருருவாக ஒளிமிளிர்ந்தனரே!
கூர்த்த நுட்பமும் சீர்த்த மதியும்
ஆர்த்த சொல்வன்மையும் வாய்த்த இவரை
அனைத்துத் தமிழரும் உச்சிமேற் போற்றினர்;
காழ்த்த சிந்தை கடனெனக் கொண்டு
பாழ்த்த கூற்றுவன் உயிர்பறித்தனனே!
மாணவர் தமக்கெலாம் மாசறு விளக்காய்
புலவர்க்கெல்லாம் பொலிவுறு தலைவராய்
இலக்கிய ஆர்வலர் கலக்கம் போக்கித்
துலங்கிடும் கலங்கரை விளக்கமாகவே
வாழ்நாளெல்லாம் வயங்கிய மாமணி;
தமிழ்ப்பகை களைந்திடும் கொள்கை வைரம்;
ஆசான் இளங்குமரன் யாண்டுளர் கொல்லோ?
மாசிலாத் திங்களாய்த் திகழொளி முகமும்
ஆசிலாச் சுடராய் வழிகாட்டும் அறிவும்
உய்விலாத் தமிழனை உயர்த்திடும் இயக்கமும்
எங்கே மறைந்தன? உரைப்பீர் எமக்கே!






## மொழியுணர்வில் நெகிழாத தன்மானச் செம்மல் ;

உணர்ச்சிப் பிழம்பாகிக் கண்ணீர் பெருக்கிடும் கன்னல் காதலர் ;
வள்ளலார் பெருமானிடத்து
வற்றாத பற்றுடைய
ஆன்ம நேயர் ;
மணமேடை
தமிழ் மணக்க ;
தமிழர் மரபொலிக்கும்
மணமக்கள் வாழ்வேற்கும் மங்கள நாயகர்
இறந்தும் இறவாத
புகழ்க் குன்றம் ;
பறை சாற்றும் ;
பார் போற்றும் .
என்பினிற்றமிழன்புசால் ;

- மு.சிதம்பரபாரதி
  தமிழியக்கம்

## முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் அவர்களின் அன்பிற்குரியவர், ஐயா இளங்குமரனார் !

அவர் உருவாக்கிய தமிழகப்புலவர் குழுவில் மூத்த உறுப்பினராக நீண்ட காலமிருந்து கி.ஆ.பெ.வி அவர்களோடு இணைந்து தமிழ்ப் பணியாற்றியவர்.

இவரது மறைவு தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் பேரிழப்பு ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறேன்!

-மணிமேகலை கண்ணன்,
செயலாளர், தமிழகப் புலவர் குழு, சென்னை.

## மன்னுநீர் மொக்கு ளொக்கும் இந்த மானிட வாழ்வில் அன்னாரைப் போன்று ஒருசிலரே தங்கள் வாழ்வைத் தவமாய் வாழ்ந்தவர்கள்.

அன்னாரின் மறைவு இழப்புதானெனினும்,

செம்மையாய் வாழ்வாங்கு வாழ்ந்த செந்தமிழ்ச்செம்மல். அவருடைய படைப்புகளின் வழியே தமிழுள்ள வரையிலும் வாழ்வார்.

- மரபு மாமணி பாவலர் மா.வரதராசன்